இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 229 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – பங்குனி 16 – ஞாயிற்றுக்கிழமை 30 மார்ச் 2025 – வெளியூர் 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 229 : Thiruvalluvar Year - 2056 - Panguni 16 - Sunday 30 March 2025 - Dak 16 Pages ₹ 5.00

## மகாத்மா காந்தி பெயரில் அமைந்துள்ள 100 நாள் வேலைத் திட்டத்தை ஒழித்துக் கட்ட முயற்சிக்கும் ஒன்றிய

# பாசிச பா.ஜ.க. அரசின் படுபாதகச் செயலைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## முதல்வரின் அழைப்பை ஏற்று தமிழ்நாடெங்கும் லட்சக்கணக்கில் கழகத்தினர் – பொதுமக்கள் திரண்டனர்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.3.2025) தலைமைச் செயலகத்தில், காவல்துறை சார்பில் 19 கோடியே 80 இலட்சத்து 23 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 96 காவலர் குடியிருப்புகள் மற்றும் 2 காவல் நிலையங்கள், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை சார்பில், 21 கோடியே 51 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள தீயணைப்பு மற்றும் மீட்புப் பணியாளர்களுக்கான 45 குடியிருப்புகள் மற்றும் 4 தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையக் கட்டடங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை இயக்குநர் அபாஷ் குமார், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் சைலேஷ் குமார் யாதவ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, மார்ச் 30 -**

**நூறு நாள் வேலைத் திட்டத்திற்கு நிதி வழங்க மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து தமிழ்நாடெங்கும் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் லட்சக்கணக்கில் கழகத்தினர் பங்கேற்றனர்.**

100 நாள் வேலை உறுதி திட்டத்தின் (MGNREGA) மூலம் தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4034 கோடி நிதியை வழங்காமல் தமிழ்நாட்டை தொடர்ச்சியாக வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. சார்பில் அனைத்து ஒன்றியங்களிலும் தலா இரண்டு இடங்களில் 29.3.2025 சனிக்கிழமை அன்று "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறும் என கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவித்திருந்தார்.

இதனையொட்டி தமிழ்நாடெங்கும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில், 09.03.2025 அன்று காலை, சென்னை, அண்ணா அறிவாலயம், கழக அலுவலகத்தில் நடைபெற்ற "தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில்" கழக மக்களவை – மாநிலங்களவை உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றும்போது, "தமிழ்நாடு மாநில நலன் குறித்து கேள்விகள் எழுப்பி, அதற்குரிய பதிலை ஒன்றிய அரசிடம் பெற வேண்டும்" என்றும்; அத்துடன் 'ஒன்றிய அரசு கடந்த நான்கரை மாதங்களாக தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4034 கோடி அளவுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட(MGNREGA) நிதியை வழங்காதது' குறித்து கேள்வி எழுப்பிட வேண்டும் என்று அறிவுரை வழங்கினார்.

கழகத் தலைவர் அவர்களின் அறிவுரைக்கிணங்க, "ஒன்றிய அரசு கடந்த நான்கரை மாதங்களாக தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4034 கோடி அளவுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட (MGNREGA) நிதியை வழங்காதது குறித்து 25.03.2025 அன்று தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேள்வி எழுப்பிய போது, அதற்கு எவ்வித பதிலையும் தராமலும் தமிழ்நாட்டிற்கு தரவேண்டிய ரூ.4034 கோடி அளவுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்ட (MGNREGA) நிதியை வழங்காமலும், மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தி.மு.க. சார்பில் 29.3.2025 சனிக்கிழமை அன்று காலை அனைத்து கழக ஒன்றியங்களிலும் தலா இரண்டு அனுமதிக்கப்பட்ட இடங்களில் 100 நாள் வேலை வாய்ப்பால் பயன்பெறுவோரைத் திரட்டி "மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்" நடைபெறும்" என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

மாவட்டக் கழக நிர்வாகிகள், கழக நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தலைமையில், கழக முன்னணி யினர் முன்னிலையில் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட, கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகி கள், அனைத்து அமைப்புகளில் உள்ள அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்கின்ற வகையில் மாவட்டக் கழகச் செயலாளர்கள் உரிய ஏற்பாடுகளைச் செய்து, தமிழ்நாடு அரசை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசுக்கு தங்கள் கண்டனத்தை பதிவு செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பபட்டிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து நேற்று (29.03.2025 - சனிக்கிழமை) தமிழ்நாடெங்கும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

இதில் லட்சக்கணக்கில் கழகத் தோழர்களும், ஏழை மக்களும் பங்கேற்றனர்.

# மோடி அரசால் - வங்கிகள் "வசூல் முகவர்"களாக மாற்றப்பட்டுள்ளன!

## காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கடும் கண்டனம்!

புதுடெல்லி, மார்ச் 30 –

துரதிர்ஷ்டவசமாக மோடி அரசால் நமது வங்கிகள் வசூல் முகவர்களாக மாற்றப்பட்டுள்ளதாக காங்கிரஸ் தலைவர் கார்கே கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில் கூறியதாவது :–

துரதிர்ஷ்டவசமாக, மோடி அரசால் நமது வங்கிகள் 'வசூல் முகவர்களாக' மாற்றப்பட்டுள்ளன. ஏ.டி.எம். பணம் எடுக்கும் கட்டணம் அதிகமாக உள்ளது.



2018 மற்றும் 2024 க்கு இடையில் சேமிப்புக் கணக்குகள் மற்றும் ஜன் தன் கணக்குகளில் இருந்து குறைந்தபட்ச இருப்புத் தொகையை பராமரிக்காததால், மோடி அரசு குறைந்தது ரூ.43,500 கோடியைப் பிடித்துள்ளது.

கொள்ளையர்களுக்கான பிற வங்கிக் கட்டணங்கள் ;

* ஒரு செயலற்ற கட்டணம், இது ஒவ்வொரு ஆண்டும் ரூ.100200 ஆகும்.

* வங்கி அறிக்கை வெளியீட்டு கட்டணம் ரூ.50100.

* SMS எச்சரிக்கைகளுக்கு காலாண்டிற்கு ரூ.2025 வசூலிக்கப்படுகிறது.

* வங்கிகள் கடன் செயலாக்கக் கட்டணமாக 13% வசூலிக்கின்றன.

* கடன் சரியான நேரத்தில் செலுத்தப்பட்டால், கடன் முன்கூட்டிய அடைப்புக் கட்டணங்கள் விதிக்கப்படும்.

* NEFT, டிமாண்ட் டிராஃப்ட் கட்டணங்கள் கூடுதல் சுமையாகும்.

* கையொப்ப மாற்றங்கள் போன்ற KYC புதுப்பிப்புகளும் கட்டணத்தை ஈர்க்கின்றன.

முன்னதாக, ஒன்றிய அரசு இந்தக் கட்டணங்களால் வசூலிக்கப்படும் தொகையின் தரவை நாடாளுமன்றத்தில் வழங்கியது, ஆனால் இப்போது "ரிசர்வ் வங்கி அத்தகைய தரவைப் பராமரிக்கவில்லை என்று கூறி இந்த நடைமுறையும் நிறுத்தப்பட்டுள்ளது.

வேதனையான விலை உயர்வு + கட்டுப்பாடற்ற கொள்ளை = மிரட்டி பணம் பறிப்பதற்கான பா.ஜ.க.வின் மந்திரம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ஏழைகளின் சம்பளப் பணத்தை விடுவிக்க பணமில்லையா? அல்லது மனமில்லையா?

# ஆர்ப்பாட்டக் குரல் டெல்லியை அசைக்கட்டும்!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அறைகூவல்!

**சென்னை, மார்ச் 30 -**

**"100 நாள் வேலைத் திட்டத்தை ஒழித்துக் கட்ட முயற்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தமிழ்நாடெங்கும் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தின் குரல் டெல்லியை அசைக்கட்டும்" என்று முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:–

**காந்தியைப் பிடிக்காதவர்களுக்கு அவர் பெயரிலான நூறு நாள் வேலைத் திட்டத்தையும் பிடிக்கவில்லை.**

**இந்தியக் கிராமப்புறப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக, இரத்த ஓட்டமாக #UPA அரசால் வளர்த்தெடுக்கப்பட்ட #MGNREGA மீது சம்மட்டி கொண்டு அடித்து ஒரேயடியாக**



**ஒழித்துக்கட்டும் வேலையில் இறங்கியிருக்கிறது இரக்கமற்ற பா.ஜ.க. அரசு!**

**உங்களுக்கு 'வேண்டப்பட்ட' கார்ப்பரேட்டுகள் என்றால் பல லட்சம் கோடி ரூபாய்க் கடனைக் கூட ஒரே கையெழுத்தில் தள்ளுபடி செய்கிறீர்களே? வேகாத வெயிலில் உடலை வருத்தி, வியர்வை சிந்தி உழைத்த ஏழைகளின் சம்பளப் பணத்தை விடுவிக்க மட்டும் ஏன் பணமில்லை? பணமில்லையா அல்லது மனமில்லையா?**

**தமிழ்நாடெங்கும் இன்றைய ஆர்ப்பாட்டத்தில் கழக உடன்பிறப்புகளும், ஏழை மக்களும் எழுப்பும் குரல் டெல்லியை எட்டட்டும்! #SadistBJP அரசின் மனம் இரங்கட்டும்!**

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.